**தலைப்பு 10 – இலஞ்ச அல்லது ஊழல்கள் பற்றிய சாத்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியற்ற அபிப்பிராயம்

இலஞ்ச அல்லது ஊழல்கள் பற்றிய சாத்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் இலஞ்ச அல்லது ஊழல்கள் பற்றிய சாத்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2019 மே 31 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் இலஞ்ச அல்லது ஊழல்கள் பற்றிய சாத்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவிற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 29 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இலஞ்ச அல்லது ஊழல்கள் பற்றிய சாத்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியற்ற அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத்

தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் இலஞ்ச அல்லது ஊழல்கள் பற்றிய சாத்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்வதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ)பிரிவின் பின்வரும் விடயங்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) இலஞ்ச அல்லது ஊழல்கள் பற்றிய சாத்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவினால் முன்னைய ஆண்டிற்காக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமைால் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக கூறுவதற்கு முடியாதுள்ளது

(ஆ) இலஞ்ச அல்லது ஊழல்கள் பற்றிய சாத்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவினால் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

**2. நிதி மீளாய்வு**

**2.1 செலவின முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | **மிகை நிதிஏற்பாடு மேற்கொண்டமை** | | |
| | 08 செலவின விடயங்களுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 64.25 மில்லியனான மிகை நிதி மேற்கொள்ளப்பட்டதால் அச்செலவின விடயங்களில் நிதிஏற்பாடு பயன்படுத்தப்பட்டதன் பின்னர் சேமிப்புக்கள் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதிஏற்பாடுகளில் 10 சதவீதம் முதல் 64 சதவீதம் வரையான அளவினைக் கொண்டிருந்தது | நிதிப்பிரமாணம் 50 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகள் நிறைவேற்றப்படும் வகையில் வருடாந்த செலவின மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். | கட்டுநிதி போதாமை, கட்டிட திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்ட ஒப்பந்தத்தை உரிய காலத்தில் நிறைவேற்று வதற்கு தவறியமை மற்றும் பட்டியல் உரிய காலத்தில் கிடைக்காமை காரணமாக கொடுப்பனவு செய்ய முடியாமல் போனமை. |
| (ஆ) | **குறைநிரப்பு மதிப்பீடு ஒதுக்கீட்டிற்காக நிதிஏற்பாடு பெற்றுக்கொள்ளல்** | | |
| | மீளாய்வாண்டின் போது ஆணைக்குழுவினால் செலவின விடய மொன்றுக்கு குறைநிரப்பு ஒதுக்கீடு மூலம் ரூபா 11,000,000 | நிதிப்பிரமாணம் 50 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகள் நிறைவேற்றப்படும் வகையில் வருடாந்த | கடந்த ஆண்டு நாட்டில் ஏற்பட்ட அரசியல் சிக்கல் காரணமாக குறித்த வெளிநாட்டு மாநாடு |

| | | | |
|---|---|---|---|
| | ஆன நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதியில் அச்செலவின விடயத்தில் ரூபா 3,436,899 சேமிக்கப்பட்டிருந்தது. | செலவின மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். | நடாத்தப்படவில்லை. |

## 2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | பிரமான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சாநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | | | |
| (i) நிதிப் பிரமாணம் 137(3) | மின்சார பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக மின்சார சபைக்கு கொடுப்பனவு செய்யும் போது நிறுவனத்தினால் தொழிலாளர் மற்றும் பொது மேந்தலை செலவினம் தொடர்பான கருத்திற் கொள்ளாமல் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | நிதிப் பிரமாணம் 137(3) இன் பிரகாரம் கொடுப்பனவு செய்யப்பட வேண்டும். | அவதானிப்புடன் இணங்குகின்றேன். எதிர்காலத்தில் எடுக்கப்படும் மனித மணித்தியாலங்களை கணக்கிட பதிவேடொன்று பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் |
| (ii) நிதிப் பிரமாணம் 211 | ஆணைக்குழுவின் மின்சாரப்பட்டியல் கொடுப்பனவு தாமதித்து செலுத்திய காரணத்தினால் மின்சார சபைக்கு ரூபா 45,415 ஆன தாமத கட்டணங்கள் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | நிதிப் பிரமாணம் 137(3) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | கட்டுநிதி கிடைப்பதற்கு தாமதித்ததால் இவ்வாறு இடம் பெற்றுள்ளது. |
| (iii) நிதிப் பிரமாணம் 104 | 2018 திசெம்பர் மாதத்தின் போது விபத்திற்குட்டிட்டிருந்த ஆணைக்குழுவின் 02 வாகனங்கள் தொடர்பான ஆரம்ப மற்றும் பூரண அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | நிதிப் பிரமாணம் 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | ஒரு வாகனத்திற்குரிய ஆரம்ப அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ள துடன் மற்றைய வாகனத்திற்கு பரிசோதனை தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) அரச நிதிச் சுற்றறிக்கை<br>------------------------------<br>2015 யூலை 10 ஆந் திகதிய 02/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | நிறுத்தி வைக்கப்பட்ட வாகனங்கள் கைதவிர்க்கப் பட்டிருக்கவில்லை. | 2015 யூலை 10 ஆந் திகதிய 02/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | அவதானிப்புடன் இணங்குகின்றோம். கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டிற்குரிய ஆணைக்குழுவினால் தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தில் செயற்பாட்டுத் திட்டம், செயற்படுத்தப்படும் காலச்சட்டகம், அச்செயற்பாடுகளில் எதிர்பார்க்கப்பட்ட முடிவுகள் / பெறுபேறுகளின் மதிப்பீடு மற்றும் மீளாய்வாண்டிற்காக நாளதுவரையாக்கப்பட்ட நிறுவனத்தின் ஒழுங்கமைப்பு திட்டம் என்பனஉள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 2014/01 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்வரும் ஆண்டுகளில் இக்குறைபாடுகள் இல்லாமல் செயல்நடவடிக்கைத் திட்டமொன்று சமர்ப்பிக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது. |

### 3.2 செயற்பாடுகளை நிறைவேற்றாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) ஆணைக்குழுவின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் ஆணைக்குழுவின் பதவியணியின் வெற்றிடங்களை நிரப்புவதற்காக இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த போதிலும், 03 பிரதிப் பணிப்பாளர் பதவிகள், 02 உதவிப் பணிப்பாளர் பதவிகள், 11 உதவிப் | செயல்நடவடிக்கைத் திட்டத்தின் திட்ட இலக்குகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 03 பிரதிப் பணிப்பாளர் பதவிகளில் 01 பதவி நிரப்பப்பட்டுள்ளது. உதவிப் பணிப்பாளர் பதவிகளுக்காக தகைமையுடைய உத்தியோகத்தர்கள் இல்லாமல் இருந்ததுடன் அதற்காக விண்ணப்பங்களை கோருவதற்கு நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | பணிப்பாளர் பதவிகள் (சட்டம்) உட்பட 15 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | எடுக்கப்பட்டு வருகின்றது. உதவிப் பணிப்பாளர் (சட்டம்) பதவிக்காக ஆட்சேர்ப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |
| (ஆ) | பழைய கட்டிடங்களிலிருந்து வெளியேறுதல் மற்றும் சிறைச்சாலை ஆணையாளரின் உத்தியோகபூர்வ இல்லம் இருந்த காணியில் புதிய கட்டிடமொன்றை நிர்மாணித்தல் போன்ற செயற்பாடுகள் திட்டமிடப்பட்டதன் பிரகாரம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | செயல்நடவடிக்கைத் திட்டத்தின் திட்ட இலக்குகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பழைய கட்டிடங்களிலிருந்து வெளியேறுவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. பழைய கட்டிடங்களிலிருந்து வெளியேறியதன் பின்னர் புதிய கட்டிட நிர்மாணம் மேற்கொள்ளப்பட உள்ளது. |
| (இ) | வருடாந்த பெறுகைத் திட்டத்தின் பிரகாரம் 2018 செப்தெம்பர் 15 ஆந் திகதி வேலை பூர்த்தி செய்வதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த புதிய பாதுகாப்பு சுவர் நிர்மானிக்கும் செயற்பாடு நிறைவேற்றப் பட்டிருக்கவில்லை. | செயல்நடவடிக்கைத் திட்டத்தின் திட்ட இலக்குகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இச்செயற்பாட்டிற்காக கட்டிட திணைக்களத்தினால் கூறுவிலை கோரப்பட்டுள்ளது. |
| (ஈ) | வாகன நிறுத்துமிடம் நவீனமயப்படுத்தப்படல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | செயல்நடவடிக்கைத் திட்டத்தின் திட்ட இலக்குகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அவதானிப்புடன் இணங்குகின்றேன். |

**3.3 வருடாந்த செலாற்றல் அறிக்கை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16.2 ஆம் பிரிவு மற்றும் 2002 செப்தம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம (1) பிரிவின் பிரகாரம் வருடாந்த செயலாற்றல் அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் வருடாந்த செயலாற்றல் அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். | வருடாந்த அறிக்கை தயாரிக்கப்பட்டு சனாதிபதி செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |

**3.4 பெறுகைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆணைக்குழுவினால் 10 மோட்டார் சைக்கில்களைக் கொள்வனவு செய்வதற்குரிய ஆகக் குறைந்த கேள்வியை நிராகரிப்பதற்கு காரணம் கேள்வி மதிப்பீட்டு அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | அரச கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 7.11.1 வழிகாட்டல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மோட்டார் சைக்கிள், பயன்படுத்தவதற்கு நிர்ணயிக்கப்பட்ட பிரிவுகளில் மோட்டார் சைக்கிள் தொடர்பாக வழங்கப்பட்டிருந்த பரிந்துரை தொழில்நுட்பக் குழு கருத்திற் கொண்டிருக்கவில்லை. |
| (ஆ) | மடிக்கணனி இயந்திரம் கொள்வனவு செய்வதற்குரிய விலை கோரல் குழுவின் அறிக்கையில் அக்குழுவின் தலைவரால் கையொப்பமிட்டிருக்கவில்லை. | அரச கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 6.3.6 வழிகாட்டல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தாமதம் காரணமாக கையொப்பமிட்டிருக்கவில்லை. |
| (இ) | ஆணைக்குழுவிற்கு அலுவலக தளபாடங்களை கொள்வனவு செய்வதற்குரிய விலை திறக்கும் குழுவின் அறிக்கையில் ஒரு அங்கத்தவர் மாத்திரம் கையொப்பமிட்டிருந்தார். | அரச கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 6.3.6 வழிகாட்டல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏனைய உத்தியோகத்தர்கள் இல்லாமை காரணமாக ஒரு ஒரு அங்கத்தவர் முன்னால் கூறுவிலை திறக்கப்பட்டன. |
| (ஈ) | ஆணைக்குழுவிற்கு அலுவலக தளபாடங்களை கொள்வனவு செய்வதற்குரிய பெறுகை செயற்பாடின் போது கேள்வி கோரல் அறிக்கையில் நிராகரிக்கப்பட்ட கேள்விதாரர்களின் பெயர் மற்றும் நிராகரிப்பதற்குரிய காரணங்கள் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | அரச கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 7.11.1 வழிகாட்டல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அவதானிப்புடன் இணங்குகின்றேன். |

**3.5 நட்டங்களும் சேதங்களும்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 ஏப்ரல் மாதத்தின் போது விபத்திற்குட்பட்டிருந்த மோட்டார் வாகனத்திற்கு இடம்பெற்ற நட்டங்களிலிருந்து சாரதியிடமிருந்து அறவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்ட ரூபா 11,371 தொகையை 2019 மே மாதம் வரை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சாரதி தற்போது பிரதேசத்தை விட்டு யாழ்ப்பாண பிரதேசத்திற்கு சென்றுள்ளதுடன் அவர் வசிக்கும் முகவரியை கண்டு பிடித்தவுடனேயே அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | 2018 நவம்பர் மாதத்தின் போது | நட்டங்கள் மற்றும் | நட்டத்தை முறையாக மதிப்பீடு |

| | | |
|---|---|---|
| விபத்திற்குட்பட்டிருந்த ஆணைக்குழுவின் 02 வாகனங்கள் தொடர்பாக எவ்வித தகவல்களும் நட்டங்கள் மற்றும் விட்டுவிடல் தொடர்பான கூற்றில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | விட்டுவிடல் தொடர்பான கூற்றில் குறிப்பிடப்பட வேண்டும். | செய்யப்படாத காரணத்தினால் அதில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. |

**4. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்**

---

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ஆண்டு ''நிகழ்ச்சிநிரல்'' பிரகாரம் அடைந்து கொள்ளல் தொடர்பாக பரீட்சிக்கும் போது ஆணைக்குழுவினால் நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான நோக்கங்களை இனங்காண்பதற்குரிய திட்டங்கள் தயாரித்தல் மற்றும் அளவிடக்கூடிய குறிகாட்டிகள் மற்றும் கூறுகளை இனங்காண்பதற்கு 2018 ஆம் ஆண்டினுள் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | நிலைபேறான நோக்கங்கள் மற்றும் இலக்குகளை இனங்காண்பதற்கு தேவையான திட்டங்களைத் தயாரித்து அவற்றை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை செயற்படுத்து வதற்காக இந்நிறுவனம் தயார்ப்படுத்தல் தொடர்பான கலந்துரையாடல் இதுவரை ஆரம்பிக்கப்படாமல் இருந்ததுடன் இது தொடர்பான அறிவுட்டும் நிகழ்ச்சித்திட்டமொன்றை நடாத்துமாறு நிலைபேறான அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சிற்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. |